**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

------

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI**

**Calendar Case No. 01 of 2024**

**Deposition of witness for** : **PW1**

**Name** : **இராஜேஷ்வரி**

**Father's Name** : **கருணாநிதி**

**Village** : **வேலம்பட்டி**

**Taluk** : **போச்சம்பள்ளி**

**Calling** : **ஓட்டல்கடை**

**Age** : **40**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of July 2025.**

**எதிரிகள் ஆஜர் .**

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை தெரியும். 06.05.2022 ம் தேதி வேலம்பட்டியில் உள்ள ஒயின் சாப் அருகே ஓட்டல் கடை வைத்திருந்தேன். அன்றைய தினம் நானும் எனது மச்சினி மனைவி ராணியும் ஓட்டலில் இருந்தோம். எனது வீட்டிற்கு அருகே இருந்தவர்கள் எங்கள் வீட்டிற்கும் கிருஷ்ணன் வீட்டிற்கும் போன் பன்னி சொன்னார்கள். மணி சுமார் 12 மணிக்கு சரசு, கவிதா, ரமணி ஆகியோர்கள் வந்து என்னையும் ராணியும் அடித்து கடை சேதப்படுத்திவிட்டார்கள். 3 எதிரிகளும் என்னை கையாள் எனது இடது கை, முதுகு ஆகிய இடங்களில் இரண்டு பேரையும் அடித்தார்கள். அதன் பிறகு பக்கத்தில் இருந்தவர்கள் எங்களை காவேரிபட்டினம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நானும் எனது

மச்சனன் மனைவியும் போகும்போது எனது வீட்டுக்காரர் மருத்துவமனையில் இருந்தார். அவருக்கு வயிற்றில் ராடால் கிழித்துவிட்டு இருந்தார்கள். நாங்கள் 3 பேரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் இருந்தோம். நாங்கள் மருத்துவமனையில் இருக்கும் போது கிருஷ்ணன், ரகுபதி, பழனி, சரசு, கவிதா, ரமனி, விஜயகுமார், ராஜ்குமார் ஆகியோர் வந்து எங்களை மருத்துவமனையிலே அடித்துவிட்டார்கள். எனது நத்தனார் முனியம்மாள் எங்களை பார்ப்பதற்காக வந்தார் அவரையும் அடித்துவிட்டார்கள். ராஜ்குமார் என்பவர் முனியம்மாளை கண்டாரஓலி, தேவிடியா என்று சொல்லி கையால் கண் மீது ஓங்கி அடித்தால் கண்கரு வெளியேவந்துவிட்டது. அதன் பின்பு எங்களை கிருஷ்ணகிரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பிவிட்டார்கள். அதன் பிறகு மேல் சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு செல்லும்மாறு சொன்னார்கள் பின்பு கோயம்பத்தூர் அரவிந் கண் மருத்துவமனைக்கு சென்று அங்கு அறுவைசிசிக்சை செய்து 7 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். காவேரிபட்டனம் அரசு மருத்துமனையில் வந்து போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் நான் சொன்னதன் பேரில் எழுதினார்கள். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். முனியம்மாளுக்கு ஒரு கண் பார்வை தெரியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

ஆஜர் எதிரிகள் யார் யார் எந்த எந்தஊர் என்றால் சரசு, கிருஷ்ணன், விஜயகுமார், ராஜ்குமார், ரமணி, கவிதா ஆகியோர் வேலம்பட்டி ஆவார்கள். ரகுபதி கிருஷ்ணன் மச்சான் என நினைக்கிறேன். பழனி செல்லப்பசெனாம்பட்டி ஆகும். நான் கடை வைத்துள்ள பகுதி கூட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். சரசு, கவிதா, ரமணி ஆகியோர் எனது கடைக்கு வந்ததாக கூறுவது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் கடைக்கு வந்து கடையை சேதப்படுத்திவிட்டார்கள் என்று புகாரிலும் எனது விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்மபவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் வீட்டில் நடந்தது தெரியாது. எனது கடையில் நடந்ததும் மருத்துவமனையில் நடந்ததும் தெரியும். எங்களுக்கும் எதிரிகளுக்கும் வழி சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழி பிரச்சனை இருந்து வந்தது காரனமாக தான் எனது கணவர் கருணாநிதி விஜயகுமாரை கொடுவாளால் வெட்டினார் என்றால் நான் பார்க்கவில்லை. எனது கணவர் விஜயகுமாரை வெட்டினார் என்றாலும் அந்த

வழக்கில் இருந்து தப்பிபதற்காக தான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் விஜயகுமார் மட்டும் தான் சம்பவ இடத்தில் இருந்தார் என்றும் மற்ற எதிரிகள் யாரும் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும் வழக்கிற்காக ஜோடனை செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரகுபதி, பழனி ஆகியோர்கள் வெளியூரை சார்ந்தவர்கள் என்றாலும் அவர்கள் சம்பத்தின் போது சம்பவயிடத்தில் இல்லை என்றாலும் அவர்களுக்கும் சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. எனது கணவர் வெட்டி கேஸ்சில் இருந்து காப்பாற்றுவதற்கு தான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் நான் குறிப்பிடுவது போல் எந்தவித சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது நாத்தனாருக்கு கண் பார்பை போனதாக கூறுவதும் வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது நத்தனார் முனியம்மாளுக்கு என்ன வயது என்றால் சுமார் 45 இருக்கும். முனியம்மாளுக்கு 45 வயது என்பதால் கண் புரை நீக்குவதற்காக தான் அரவிந் மருத்துவமனைக்கு சென்றார் என்றால் சரியல்ல. மேற்படி எனது கணவர் வெட்டியதாக கூறும் வழக்கில் இருந்து தப்பிபதற்காக தான் முனியம்மாள் மருத்துவமனைக்கு சென்றார் என்றால் சரியல்ல. முனியம்மாள் எனது நத்தனார் என்பதால் அவரை காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.